# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,220—1960 ඔක්තෝබර් 28 වැනි සිකුරාදා—28.10.1960

12,220 ம் இலக்கம்—1960 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1955 ம் ஆண்டின் 7 ம் இலக்கச் சட்டத்தாலும், 1957 ம் ஆண்டின் 30 ம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தியமைக்கப்பட்ட 1947 ம் ஆண்டின் 30 ம் இலக்க உணவு வழங்கல் சட்டம்**

**4 (2) ம் பிரிவின் கீழுள்ள கட்டளை**

1947 ம் ஆண்டின் 30 ம் இலக்க உணவு வழங்கல் சட்டத்தின் 4 (2) ம் பிரிவின் பிரகாரம் டிக்கிரி பண்டா இலங்கரத்தின, வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்போக்குவரத்து அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளையால் 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 13 ந் திகதி வெளியான 12,198 ம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்போக்குவரத்து அமைச்சரால், 1960 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9 ந் திகதியில் திருத்தியமைக்கப்பட்ட சட்டத்தின் அட்டவணையை " மாசிக் கருவாடு, பொனிற்றோ கருவாடு வேறு இவைபோன்ற இரகங்களும் அல்லது மீனில் தயாரிக்கப்படும் மற்றவையும் " என்பவற்றைச் சேர்த்து பின்வருமாறு வாசிக்கப்படத் திருத்தியமைக்கிறேன்.

அட்டவணை

அரிசி
நெல்
கோதுமை
கோதுமை மாவு
சீனி
ஈரவெண்காயம்
இந்திய மக்கள் குடியரசிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு அனுப்பப்படும் பனங்கற்கண்டைத் தவிர்ந்த கற்கண்டு
இந்திய மக்கள் குடியரசிலிருந்தும் பாக்கிஸ்தானிலிருந்தும் உற்பத்தி செய்யப்பட்டு அனுப்பப்படும் கருப்பட்டியைத் தவிர்ந்த கருப்பட்டி
பருப்பு (உடைக்கப்பட்டதும், உடைக்கப்படாததும்) மசூர்ப்பருப்பு
மாசிக் கருவாடு, பொனிற்றோ கருவாடு வேறு இவைபோன்ற இரகங்களும் அல்லது மீனில் தயாரிக்கப்படும் மற்றவையும்.

டி. பி. இலங்கரத்தின,
வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்போக்குவரத்து அமைச்சர்.

வர்த்தக, வியாபார, உணவு, கப்பற்போக்குவரத்து அமைச்சு (உணவுப் பகுதி),
330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

1960 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ந் திகதி.
10–113.